<u>**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**</u>

<u>**O.S. No. 155/2022 PW2**</u>

12.11.2025 <u>**வா.சா.2 நரேன் பாபு சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**</u>

வாதியை தெரியும், எல்லம்மாள், புனிதா, வேகாஸ்ரீ, நவின்குமார் ஆகியோரை எனக்கு தெரியாது. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழில் எனக்கு நன்றாக எழுத படிக்க தெரியும். வாதி எனது பக்கத்து தெருவில் வசிக்கிறார். எனது அப்பா மண்டியில் வேலை செய்கிறார். இந்த வழக்கு கடனுறுதி சீட்டுகளுக்கு முன்பாகவே சத்தியநாராயணமூர்த்தி வாதியிடம் கடன் வாங்கியுள்ளாரா என்றால் வாங்கியுள்ளார், திரும்பவும் செலுத்தியுள்ளார். அவ்வாறு கடனுறுதி சீட்டுக்கு முன்பு அவர்களுக்குள் நடந்த கடன் விவரங்கள் குறித்து எனக்கு தெரியும். வாதியிடம் வேறு நபர்கள் கடன் வாங்கினாலும் வாதி என்னை தான் அழைப்பார். நான் கையொப்பம் போடுவேன். நானே வாதியிடம் நிறைய முறை கடன் வாங்கியுள்ளேன். சத்தியநாராயணமூர்த்தி கூட்டுறவு வங்கியில் மேனேஜர் என்று சொன்னார். சத்தியநாராயணமூர்த்தியின் சம்பள விவரங்கள் குறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்கு கடனுறுதி சீட்டு நான்கிலும் நான் சாட்சி கையொப்பங்கள் மட்டும் போட்டுள்ளேன் என்றால் சரிதான். முதல் கடனுறுதி சீட்டு 6ம் மாதம் 2020லும், 2 முதல் 4 கடனுறுதி சீட்டுகள் 9ம் மாதத்திலேயே சுமார் 2 - 3 நாட்கள் இடைவெளியிலேயே ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

பிரதிவாதி உரிய வட்டியை கொடுக்காதபோது, சிறிய கால இடைவெளியிலேயே ஏன் பெரிய தொகைகளை அவருக்கு கொடுக்கிறீர்கள் என்று வாதியிடம் நான்கேட்டேனா என்றால் இல்லை. ஆனால் பிரதிவாதி பிள்ளைகளின் படிப்பு செலவிற்கு என்று சொல்லி அவ்வாறு கடன் வாங்கிய விவரம் எனக்கு தெரியும். ஆனால் பிரதிவாதியிடம் மேற்படி காரணத்தை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. சத்திய நாராயணமூர்த்தியின் மகன் மற்றும் மகள்கள் என்ன படிக்கிறார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, கல்லூரியில் படிக்கிறார்கள் என்று மட்டும் தெரியும். ஆவணத்தில் கையொப்பம் போடுவதற்கு வாதி தான் என்னை அழைத்தார். அவரது வீட்டிற்கு என்னை வரச்சொன்னார். மேற்படி வழக்கின் நான்கு புரோநோட்டுகளிலும் ரகுராமன் வீட்டில் வைத்து தான் நான் சாட்சி கையெழுத்து போட்டேன். நான்கு புரோ நோட்டுகளையும் படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டேன். 08.06.2020 கடனுறுதி சீட்டில் எவ்வளவு கடன் வாங்கப்பட்டது என்று தெரியுமா என்றால் ரூ.3 இலட்சம் வாங்கப்பட்டது ஆனால் வட்டி எவ்வளவு என்று எனக்கு தெரியாது. மற்ற மூன்று புரோ நோட்டுகளில் எவ்வளவு வட்டி

குறிப்பிடப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் நான் அவ்வளவு கூர்மையாக கவனிக்கவில்லை. வாதிக்கு நான் நெருக்கமானவர் என்ற முறையில் அவரிடம் நானே கடன் பெற்றவர் என்ற முறையிலும் வாதிக்கு ஆதரவாக நான்கு புரோ நோட்டுகளிலும் வாதியின் வீட்டிலேயே வைத்து கையொப்பம் செய்து விட்டு வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.